தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
வேளாண்மை அறிவியல் நிலையம்
நீடாமங்கலம் - 614 404
ICAR

# நெற்களஞ்சியம்

மலர் : 10 அக்டோபர் - டிசம்பர் 2012 & ஜனவரி - மார்ச் 2013 இதழ் : 18

## திட்ட ஒருங்கிணைப்பாளர் பொறுப்பேற்பு



நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளராக முனைவர் க.சோழன் அவர்கள் 10.12.2012 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் பூச்சியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்று கடந்த 23 ஆண்டுகளாக ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர், மதுரை வேளாண்மைக் கல்லூரி, வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பல்வேறு பணிகளை சிறப்பாக செயல்படுத்தியவர்.

## விரிவாக்க கல்வி இயக்குநர் பொறுப்பேற்பு



தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்குநராக முனைவர் கா.அ. பொன்னுசாமி அவர்கள் 1-3-2013 அன்று பொறுப் பேற்றுக் கொண்டார். இவர் சிறந்த ஆசிரியர் மட்டுமல்லாது மனித நேயமிக்க பண்பாளர். இவர் பணி சிறக்க நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## மாண்புமிகு தமிழக முதல்வரின் கூடுதல் சம்பா சாகுபடி சிறப்புத் தொகுப்பு திட்டம்

திருவாரூர் மாவட்டத்தில் நீரின்றி வாடும் சம்பா பயிர்களை காப்பாற்ற மாண்புமிகு தமிழக முதல்வரின் கூடுதல் சம்பா சாகுபடி சிறப்புத் தொகுப்பு திட்டத்தின் கீழ் பல்வகைத் தெளிப்பான் மற்றும் நடமாடும் தெளிப்பான் மூலம் பிபிஎப்எம் எனப்படும் நுண்ணுயிரி மற்றும் நீர் தெளித்தல் குறித்து செயல் விளக்கங்கள் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் திருவாரூர் மாவட்டத்தில் பரவலாக செயல்படுத்தப்பட்டது.



டெல்டா மாவட்டங்களிலேயே முதன் முதலாக 12.12.2012 அன்று கொற்கை கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. நடராசன் மற்றும் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. உலகநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் 200 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



கச்சனம் கிராமத்தில் 13.12.2012 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் அ.சந்திரசேகரன் அவர்கள் கலந்து கொண்டார் நிகழ்ச்சியில் 300 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

திருவலஞ்சுழி கிராமத்தில் 15.12.2012 அன்று விரிவாக்கல்வி இயக்குநர் முனைவர். பா. கலைச்செல்வன், நீர் நுட்பவியல் இயக்குநர் முனைவர். செல்லமுத்து, வேளாண்மை பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர். சந்தானபோசு, தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் 350 விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



இந்த சிறப்புத் திட்டத்தின் மூலம் திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் 13,958 எக்டர் நிலப்பரப்பில் 6,491 விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

# முக்கிய நிகழ்வுகள்

## உயர்மட்டக்குழு ஆய்வு

தமிழக அரசின் உயர்மட்டக்குழுவானது மாண்புமிகு நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் 10.1.2013 மற்றும் 11.1.2013 ஆகிய இரண்டு நாட்கள் திருவாரூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை ஆய்வு செய்தனர். நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. சோழன் அவர்கள் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறிப்புகளை உயர்மட்டக் குழுவினரிடம் வழங்கினார்.



## துணை வேந்தர் ஆய்வு



திருத்துறைப்பூண்டி வட்டாரம் நுனாக்காடு கிராமத்தில் 4.1.2013 அன்று நடைபெற்ற மாபெரும் செயல்விளக்கத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் கலந்து கொண்டார். சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கண்காணிப்புக் குழு வருகை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சிறப்பு கண்காணிப்புக்குழுவானது முனைவர் ராமசாமி அவர்கள் தலைமையில் 7.2.2013 அன்று திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்து தொண்டியக்காடு, சித்தாலத்தூர், காடுவெளி, எழிலூர், பாமணி போன்ற கிராமங்களில் நடைபெற்ற செயல் விளக்கங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.



## துணைவேந்தர் வருகை



தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் 4.1.2013 அன்று இந்நிலையத்திற்கு வருகை புரிந்து தொழில்நுட்ப மாதிரித்திடல்களை பார்வையிட்டு விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

## துல்லிய பண்ணைய முறையில் கரும்பு சாகுபடி

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (2011-12) இந்நிலையத்தில் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களை சார்ந்த விவசாயிகளுக்கு துல்லிய பண்ணைய முறையில் கரும்பு சாகுபடி செய்வது குறித்து செயல் விளக்கங்களுடன் முனைவர் கை.குமணன் பயிற்சியளித்தார். தொடர்ந்து நடைபெற்ற பயிற்சிகளில் மொத்தம் 340 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



## அடர் நடவு முறையில் வாழை சாகுபடி

திருவாரூர் மாவட்டத்தில் அடர் நடவு முறையில் வாழை சாகுபடி செய்வது பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்நிலையத்தில் 1.2.2013 அன்று பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. சோழன் தொடங்கி வைத்தார். முனைவர் கை. குமணன் தொழில்நுட்ப விளக்கமளித்தார். பயிற்சியில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## மக்கள் பங்கேற்பு முறையில் ஊரக வளங்கள் மற்றும் நிலைமைகளை மதிப்பீடு செய்தல்

நடப்பு 2013-14ம் ஆண்டிற்கான திட்ட முன்வரைவு அறிக்கை தயாரிப்பதற்காக திருவாரூர் மாவட்டத்தை பழையாற்று பாசனப்பகுதி, புது ஆற்றுப் பாசனப் பகுதி மற்றும் கடற்கரைப்பகுதி என மூன்று பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு கிராமம் என முறையே பஞ்சநதிக்குளம், ஒவேல்குடி மற்றும் முனங்காடு ஆகிய கிராமங்களை தேர்வு செய்து மக்கள் பங்கேற்பு முறையில் ஊரக வளங்கள் மற்றும் நிலைமைகளை 1.2.2013 மற்றும் 5.2.2013 ஆகிய தேதிகளில் மதிப்பீடு செய்து அறிக்கை தயாரிக்கப்பட்டது.



## நபார்டு உழவர் மன்றக் கூட்டம்

இந்நிலையத்தின் மூலம் துவக்கப்பட்ட நபார்டு உழவர் மன்றங்களின் கூட்டம் 09.11.2012 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு திருவாரூர் மாவட்ட நபார்டு வளர்ச்சி அலுவலர் திரு. ரவிசங்கர் தலைமை வகித்து உழவர் மன்றங்கள் சிறப்பாக செயல்படுவதற்கான ஆலோசனைகளை வழங்கினார். நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி. செங்குட்டுவன் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் தங்க. தாமோதரன் கருத்துரை வழங்கினார். கூட்டத்தில் ஒன்பது உழவர் மன்றங்களை சேர்ந்த 26 பேர் கலந்து கொண்டனர்.

## உணவுக் காளான் உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி



புரதச்சத்து நிறைந்த உணவுக் காளான் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்து 20.11.2012 அன்று இந்நிலையத்தில் பயிற்சி நடைபெற்றது. முனைவர் ஆனந்த கிருஷ்ணவேணி காளான் வளர்ப்பு, விற்பனை வாய்ப்புகள் குறித்து செயல் விளக்கத்துடன் பயிற்சியளித்தார். திருமதி. ரேகா காளான் குடில் பராமரிப்பு குறித்து விளக்கினார். பயிற்சியில் 65 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

## நவீன மலர் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

திருவாரூர் மாவட்டத்தில் படுகை நிலங்களில் மலர் சாகுபடி செய்து வரும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நவீன மலர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து 18.12.2012 அன்று பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியினை முனைவர் கை. குமணன் மற்றும் முனைவர் வே. அலெக்ஸ் ஆல்பர்ட் ஆகியோர் இணைந்து நடத்தினர். பயிற்சியில் 16 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

## கண்டுணர்வு சுற்றுலா

திருவாரூர் மாவட்ட மலர் சாகுபடியாளர்கள் பயன்பெறும் வகையில் 19.12.2012 அன்று இந்நிலையத்தின் மூலம் 16 விவசாயிகளை கோயம்புத்தூர் தமிழ்நாடு



வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மலர் சாகுபடி கருத்தரங்கிற்கு கண்டுணர்வு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

## தீவனப் பயிர்களின் உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி



திருவாரூர் மாவட்ட கால்நடைத்துறை சார்பாக இந்நிலையத்தில் 16.11.2012 அன்று தீவனப் பயிர்களில் உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை திருவாரூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. நடராசன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். முனைவர் ஆனந்த கிருஷ்ணவேணி, கால்நடை மருத்துவர் மகேந்திரன் ஆகியோர் பயிற்சியளித்தனர். பயிற்சியில் 76 பேர் கலந்து கொண்டனர்.

## மண்புழு உற்பத்தி பயிற்சி

திருவாரூர் மாவட்டத்தில் அங்கக வேளாண்மையை விரிவாக்கும் வகையில் இந்நிலையத்தில்



04.12.2012 அன்று மண்புழு உரம் உற்பத்தி மற்றும் வெர்மிவாஷ் தயாரித்தல் குறித்து பயிற்சி நடைபெற்றது. முனைவர் கு. சுதாகர் அவர்களால் நடத்தப்பட்ட பயிற்சியில் 44 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## வளம் கொழிக்க மரம் வளர்ப்புப் பயிற்சி

திருவாரூர் மாவட்ட வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில் வளம் கொழிக்க மரம் வளர்ப்பு என்ற தலைப்பில் 27.11.2012 அன்று பயிற்சி நடைபெற்றது.



பயிற்சிக்கு தஞ்சாவூர் மாவட்ட உதவி வன பாதுகாவலர் திரு. செல்வம் தலையேற்று மரம் வளர்ப்பில் அரசுத் திட்டங்கள் குறித்து விளக்கினார். பயிற்சியில் மன்னார்குடி வனச்சரகர் திரு. தங்கவேல், திருவாரூர் வன விரிவாக்க அலுவலர் திரு. அரிகிருஷ்ணன், முனைவர் இளங்கோ மற்றும் முன்னோடி விவசாயி திரு. ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டு தொழில்நுட்ப விளக்கமளித்தனர். முனைவர் கை. குமணன் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். பயிற்சியில் 65க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கருவி மூலம் வைக்கோல் கட்டுதல் - செயல் விளக்கம்

இயந்திரம் மூலம் அறுவடை செய்தபின் வைக்கோல் வயல் முழுவதும் சிதறி கிடப்பதால் அவற்றை சேமித்து வைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இந் நிலையத்தில் 7.2.2013 அன்று கருவி மூலம் வைக்கோல் கட்டுதல் குறித்து முனைவர் காமராஜ் அவர்களால் நேரடி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. முன்னோடி விவசாயிகள் 30 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தொழில்நுட்ப விளக்கம் பெற்றனர்.



## நெல் சாகுபடியில் இயந்திரமாயமாக்கல்

கூலி ஆட்கள் பற்றாக்குறைக் காரணமாக நெல் சாகுபடி கேள்விக் குறியாகி உள்ளதால் இயந்திரமய மாக்குதல் அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இந்நிலையத்தில் நெல் சாகுபடியில் இயந்திரமயமாக்குதல் குறித்து 15.2.2013 அன்று பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



## சூடோமோனாஸ் ஃபிளோரசன்ஸ் உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி

விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர வேளாண் சார்ந்த உப தொழில்கள் அவசியம் என்பதை கவனத்தில் கொண்டு இந்நிலையத்தில் 15.2.2013 அன்று சூடோமோனாஸ் ஃபிளோரசன்ஸ் உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. சோழன் தொடங்கி வைத்தார். பயிற்சியில் மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.



## பிரபஞ்சத்தை இணைக்கும் எங்கள் இணையதளம்

பிரபஞ்சத்தை இணைக்கும் இணைப்புச் சங்கிலியாய், தகவல் வங்கியாய் எந்நாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள எங்கள் இணையதளத்தை **www.kvkthiruvarur.com** கண்டு தங்கள் மேலான கருத்துக்களை தொலைபேசியில் தெரிவியுங்கள்.

## கலந்தாய்வுக் கூட்டம்

திருவாரூர் மாவட்ட வேளாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இந்நிலைய விஞ்ஞானிகள் 14.2.2013 அன்று கலந்தாய்வு செய்து 2013-14 ம் ஆண்டுக்கான திட்ட வரைவு அறிக்கை தயாரிக்க தேவையான ஆலோசனைகளை கேட்டறிந்தனர்.



## உணவுக் காளான் உற்பத்தித் தொழில்நுட்பப் பயிற்சி

திருவாரூர் மாவட்ட விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் சுய உதவிக் குழுவினர் பயன்பெறும் வகையில் இந்நிலையத்தில் 19.2.2013 அன்று உணவுக் காளான் உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. சோழன் தொடங்கி வைத்தார். முனைவர் த ங் க . தாமோதரன் மற்றும் முனைவர் ஆனந்த கிருஷ்ணவேணி ஆகியோர் பயிற்சி அளித்தனர். பயிற்சியில் 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## விரிவாக்க கல்வி இயக்குநர் வருகை

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர் கா.அ. பொன்னுசாமி அவர்கள் முதன் முதலாக இந் நிலையத்திற்கு 8.3.2013 அன்று வருகை புரிந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மாதிரித் திடல்களை பார்வையிட்டு பாராட்டினார்.



## மாநில அளவிலான விவசாயிகள் சந்திப்பு

தமிழக விவசாயிகளின் தேவைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை கண்டறிந்து அதற்கான தீர்வுகளை வழங்கிட வேண்டி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 28.2.2013 மற்றும் 1.3.2013 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாநில அளவிலான விவசாயிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்க இந்நிலையத்தின் மூலம் 15 முன்னோடி விவசாயிகள் கண்டுனர் சுற்றுலா மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். திருவாரூர் மாவட்ட விவசாயிகளின் பிரச்சனைகள் மற்றும் எதிர்-பார்ப்புகள் பற்றி விளக்கமாக எடுத்துரைக்கப் பட்டது.



## வயல் தின விழா

கோட்டூர் ஒன்றியம் கெழுவத்தூர் கிராமத்தில் முன்னோடி விவசாயி திரு. தெய்வமணி அவர்களது தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நன்செய் நிலத்திற்கேற்ற



ஒருங்கிணைந்த பண்ணையத்தில் - முதல் நிலை செயல் விளக்கத் திடலின் வயல் விழா நடைபெற்ற போது விவசாயிகள் விஞ்ஞானி-கள் பார்வையிட்டு மீன் குளத்தின் மேல் கூண்டு அமைத்து நாட்டுக்கோழி வளர்ப்பு, அசோலா வளர்ப்பு, மண்புழு உரம் உற்பத்தி, பரண் மேல் ஆடு வளர்ப்பு, காய்கறி உற்பத்தி, நெல் சாகுபடி, கறவை மாடு வளர்ப்பு மற்றும் மீன்குஞ்சு வளர்ப்பு என அனைத்தையும் ஒருங்கிணைத்து சிறப்பாக செயல்படுத்தி வரும் விவசாயியை பாராட்டினார்.

## வயல் தினவிழா

வலங்கைமான் வட்டாரம் ரெங்கநாதபுரம் கிராமத்தில் திரு. பன்னீர் செல்வம் அவர்களது தோட்டத்தில் அமைக்கப் பட்டிருந்த செவ்வந்திப் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய முதல் நிலை செயல் விளக்கத் திடலின் வயல் தினவிழா நடைபெற்றது. விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விஞ்ஞானிகள் தொழில்நுட்ப விளக்கமளித்தனர்.



## நிழல்வலை குடிலில் குடை மிளகாய் சாகுபடி

விவசாயிகளின் பங்களிப்புடன் காவிரிப் பாசனப் பகுதியில் நிழல்வலை குடிலில் காய்கறி சாகுபடி திட்டத்தின் கீழ் நபார்டு நிதியுதவியுடன் 2013-14 ம் ஆண்டிற்கான நிழல்வலைக் குடிலில் குடமிளகாய் சாகுபடி என்ற



தலைப்பில் நபார்டு உழவர் மன்றத்தை சார்ந்த 150 உறுப்பினர்களுக்கு இரண்டு நாள் பயிற்சியாக மொத்தம் 5 பயிற்சிகள் இந்நிலையத்தில் நடைபெற்றது. முதல் பயிற்சியை 28.1.2013 அன்று நபார்டு வங்கி திருவாரூர் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. என். இரவிசங்கர் தொடங்கி வைத்தார். இப்பயிற்சிகளை முனைவர் கை.குமணன் ஒருங்கிணைத்து நடத்தினார்.

## நெற்பயிரில் மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து கரைப்பான்கள் பயிற்சி

இந்நிலையத்தில் 5.3.2012 அன்று நெற்பயிரில் மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து கரைப்பான்கள் குறித்து பயிற்சி நடைபெற்றது. அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முன்னாள் முதல்வர் முனைவர் அந்தோனிராஜ் அவர்கள் தொடங்கி வைத்தார். பயிற்சியில் 50 க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.



## வயல்வெளி ஆய்வு

மன்னார்குடி வட்டாரம் மேலத் திருப்பாலக்குடி கிராமத்தில் மார்கழிப் பட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த நிலக்கடலை பயிரில் வாடல் நோய்த்தாக்குதல் பரவலாக காணப்பட்டதை தொடர்ந்து விஞ்ஞானிகள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு நோய்த் தடுப்பு முறைகளுக்கு விளக்கமளித்தனர்.



## உழவர் மன்ற துவக்க விழா

சித்தாலத்தூர் கிராமத்தில் 4-1-2013 அன்று நம்மாழ்வார் உழவர் மன்ற துவக்க விழா நீடாமங்கலம்



அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. சோழன் அவர்கள் தலைமையில் நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு. என். இரவிசங்கர் அவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

## கள ஆய்வு

கொரடாச்சேரி வட்டாரம் சாருவன் கிராமத்தில்



முன்னோடி விவசாயி திரு.சிவராஜ் அவர்கள் தோட்டத்தில் பரங்கி மற்றும் பூசணி பயிரிட்டுள்ளதை விஞ்ஞானிகள் பார்வையிட்டு தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினார்கள்.

**நீர் மறைய நீர் கட்டு - நிறைய வரும் நெற் கட்டு**

## ஒருங்கிணைந்த வேளாண்மைப் பயிற்சி



இந்நிலையத்தில் 18-3-2013 அன்று திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த வேளாண்மை என்ற தலைப்பில் பயிற்சி நடைப் பெற்றது. பயிற்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. சோழன் அவர்கள் தொடங்கி வைத்தார். ஷீலா சமூக நல சங்கத்தின் மூலம் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## கள ஆய்வு



உள்ளிக்கோட்டை கிராமத்தில் திரு. முருகையன் வயலில் அமைக்கப் பட்டிருந்த முதல் நிலை செயல் விளக்கத் திடலை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. சோழன் மற்றும் விஞ்ஞானிகள் பார்வையிட்டனர்.

## துல்லிய பண்ணைய பயிற்சி





துல்லியப் பண்ணையத் திட்டத்தின் கீழ் இந் நிலைய விஞ்ஞானிகள் புதுக்கோட்டை, மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்ட விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர். இப்பயிற்சிகளில் 200 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## வங்கியாளர்கள் ஆய்வு





பாரத ஸ்டேட் வங்கி உயர்மட்ட அலுவலர் -கள் இந்நிலையத்திற்கு வருகை புரிந்து தொழில் நுட்ப மாதிரித்திடல்களை பார்வையிட்டனர். மேலும் மகிழஞ்சேரி கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள மல்பெரி செடிகளை பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

## விஞ்ஞானிகள் வருகை



கான்பூரில் உள்ள பயறு ஆராய்ச்சி இயக்குனரகத்தின் விஞ்ஞானிகள் திருவாரூர் மாவட்டத்திற்கு அன்று வருகை புரிந்து நெல் தரிசில் பயிரிடப்பட்டுள்ள பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களை பார்வையிட்டனர். பின்னர் நிலைய விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடினர்.

## சுய உதவிக் குழுவினர் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கான பணிமனை



இந்நிலையத்தில் மகளீர் சுயஉதவிக் குழுவினர் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் பயன் பெறும் வகைளில் மதிப்பூட்டடப்பட்ட பொருட்களுக்கான பணிமனை நடைப் பெற்றது. பயிற்சியில் தஞ்சாவூரில் உள்ள இந்திய உணவு பதன நிறுவன விஞ்ஞானிகள் கலந்து கொண்டு தொழில்நுட்ப விளக்கமளித்தனர். பயிற்சியில் 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## களர் உவர்நில சீர்திருத்த மற்றும் நெல் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி



தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்நிலையத்தில் களர் உவர் நிலச் சீர்திருத்த முறைகள் மற்றும் நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து 1-3-2013 அன்று பயிற்சி நடைப் பெற்றது. முனைவர் கா.சிவக்குமார் மற்றும் முனைவர் ச. ஆனந்த கிருஷ்ணவேணி ஆகியோர் பயிற்சியளித்தனர். பயிற்சியில் 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## காய்கறி உற்பத்தி பயிற்சி



இந்நிலையத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் விவசாயிகளுக்கான காய்கறி உற்பத்தி பயிற்சி 15-3-2013 அன்று நடைப்பெற்றது.

## களர் உவர் நில சீர்திருத்த முறைகள் மற்றும் நெல் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் களர் உவர் நில சீர்திருத்த முறைகள் மற்றும் நெல் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி முனாங்காடு கிராமத்தில் நடைபெற்றது. முனைவர் கா. சிவக்குமார் மற்றும் முனைவர் ஆனந்த கிருஷ்ணவேணி ஆகியோர் பயிற்சி அளித்தனர். பயிற்சியில் 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## ஒருங்கிணைந்த பண்ணையம்

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் செயல்படுத்திவரும் ஒருங்கிணைந்த பண்ணையம் - முதல் நிலை செயல் விளக்கத் திடல் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு தேவையான கோழி வளர்ப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.



# தொழில்நுட்ப செய்திகள்

## கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்பு

குளங்களில் உண்ணும் உணவு மற்றும் பழக்க வழக்கங்களில் மாறுபட்டு, உணவு, இடம், உயிர்வளி ஆகியவற்றைப் போட்டி இல்லாமல் பயன்படுத்தும் பல்வேறு இன மீன் குஞ்சுகளை ஒரே குளத்தினில் இருப்பு செய்து வளர்ப்பது கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்பாகும். இதன்படி ஒரு வகை மீனை மட்டும் தேர்வு செய்யாமல், நான்கு முதல் ஆறு வகையான மீன் இனங்களைத் தேர்வு செய்து குளங்களில் இருப்பு செய்து வளர்க்கலாம். இந்த முறையில் இந்தியப் பெருங் கெண்டைகளான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் அயல்நாட்டு கெண்டைகளான சாதாக் கெண்டை, புல்கெண்டை மற்றும் வெள்ளிக் கெண்டை ஆகியவற்றை சேர்த்து வளர்க்கலாம். இவற்றுள் கட்லாவும், வெள்ளிக் கெண்டையும் முறையே நீரின் மேல் மட்டத்தில் உள்ள விலங்கின மற்றும் தாவர நுண்ணுயிர் மிதவைகளை உண்டு வாழ்கின்றன.

ரோகு நீரின் நடுமட்டத்தில் உள்ள தாவர மற்றும் விலங்கின நுண்ணுயிர் மிதவைகளை உண்கிறது. குளத்தின் அடிமட்டத்தில் அல்லது மண்ணில் புதைந்துள்ள உணவுகளை மிர்காலும், சாதாக் கெண்டையும் உண்டு வளரும். புல்கெண்டை, குளக்கரையோரங்களில் காணப்படும் புற்களையும், இலைகளையும் உண்டு வளர்கிறது.


கட்லா


வெள்ளிக் கெண்டை


ரோகு


புல்கெண்டை


மிர்கால்


சாதாக் கெண்டை

## மெத்தைலோ பாக்டீரியம்

மெத்தைலோ பாக்டீரியா பொதுவாக பிபிஎஃப்எம் என்றழைக்கப்படுகிறது. மெத்தைலோ பாக்டீரியா என்னும் நுண்ணுயிர் பெரும்பாலும் இலைகள், வேர்கள் மற்றும் தாவரங்களின் உட்புறம் வாழும் தன்மையுடையது. இவை இலைகளில் இயற்கையாகவே இருந்து மெத்தனால் என்ற வேதிப் பொருளை உணவாக கொண்டு வாழ்பவை. இப் பாக்டீரியாவானது அனைத்து காலங்கள் மற்றும் சூழ்நிலைகளில் விதை முளைத்த பருவத்திலிருந்து அறுவடை காலம் வரை இலைகளின் மேல் வாழ்ந்து கொண்டு பயிர்களுக்கு நன்மை செய்கிறது. மெத்தைலோ பாக்டீரியா பயிர் வளர்ச்சி ஊக்கிகளான சைட்டோகைனின், ஆக்சின் மற்றும் யூரியேஸ் நொதிப் பொருளை பயிர்களுக்கு அளிக்கிறது. மேலும் பயிர்களுக்கு முறையாக (மாதம் ஒரு முறை) தெளிப்பதன் மூலம் பயிர்களின் வளர்ச்சியினை அதிகரிப்பதுடன் வறட்சி மற்றும் அதிக வெப்பத்தில் இருந்து பயிரை காப்பாற்றும்.

## உயர் விளைச்சல் தீவனப் பயிர்கள்

### கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் - கோ (சிஎன்) 4

அதிக தூர்களுடன் விரைவாக வளரும் தன்மையுடையது. ஆண்டுக்கு எக்டருக்கு 400 டன் வரை பசுந்தீவன விளைச்சல் தரவல்லது.

### மறுதாம்பு தீவனச் சோளம் - கோ (எப்எஸ்) 29

வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது சராசரியாக ஓராண்டில் எக்டருக்கு 170 டன்கள் வரை பசுந்தீவன விளைச்சலைத் தரவல்லது. விதை உற்பத்தியின் மூலமும் வருமானம் ஈட்டலாம்.

### கினியாப்புல் - கோ (கிஜி) 3

நிழலைத் தாங்கி வளரக் கூடியது. தென்னந் தோப்புகளில் ஊடுபயிராக பயிரிட ஏற்றது. ஆண்டுக்கு எக்டருக்கு 340 டன் பசுந்தீவன விளைச்சலைத் தரவல்லது. பூச்சி நோய் தாக்குதல் இல்லாதது.

### வேலி மசால்

ஆடுகளுக்கு மிகவும் ஏற்றது ஆண்டுக்கு எக்டருக்கு 100 டன்கள் தீவன விளைச்சலைத் தரவல்லது. வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய தன்மையைக் கொண்டது.

### கள ஆய்வு

முனாங்காடு கிராமத்தில் கேழ்வரகு பயிரிட்டுள்ள வயலை முனைவர் தங்க. தாமோதரன் மற்றும் முனைவர் செந்தில்குமார் ஆகியோர் பார்வையிட்டு விவசாயிகளின் கேள்விகளுக்கு தொழில்நுட்ப விளக்கமளித்தனர்.



### வயல் வெளிப் பள்ளி

நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து பத்தூர் மேல்கரை கிராமத்தில் வயல் வெளிப்பள்ளி நடத்தப்பட்டது.



### களப் பரிசோதனைத் திடல்

பொங்கல் கரும்பில் விதைப்பரு நாற்று நடவு முறை குறித்த களப் பரிசோதனைத் திடல் காரிக்கோட்டை அருண்குமார் வயலில் அமைக்கப்பட்டிருந்ததை விஞ்ஞானிகள் பார்வையிட்டனர்.



### கள ஆய்வு

மன்னார்குடி வட்டாரம் மேல நாகை கிராமத்தில் துல்லிய பண்ணையம் அமைத்து பந்தல் காய்கறிப் பயிர்களை பயிரிட்டிருந்த திரு. ராஜேந்திரன் அவர்களின் தோட்டத்தை திட்ட ஒருங்கிணைப் பாளர் முனைவர் க. சோழன் மற்றும் விஞ்ஞானிகள் பார்வையிட்டு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கினார்.



### முதல் நிலை செயல் விளக்கத்திடல்

திருவாரூர் மாவட்டத்தில் உள்நாட்டு கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்பில் வளர்ச்சி அடக்கப்பட்ட மீன் குஞ்சு தொழில்நுட்பத்தை பிரபல படுத்துதல் பற்றிய முதல் நிலை செயல் விளக்கத் திடல் தேவர்கண்டநல்லூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளதை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.சோழன் பார்வையிட்டு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கினார்.

**உழவரின்**
**வளரும் வேளாண்மைக்கு**
**சந்தா செலுத்துவீர்...**

ஆயுள் சந்தா (15 ஆண்டுகள்) ரூ.1,000/-

ஆண்டு சந்தா ரூ.100/-

தனி இதழ் ரூ.15/-

### கள ஆய்வு

மேல நாகை கிராமத்தில் முன்னோடி விவசாயி திரு.சரவணன் அவர்களின் தோட்டத்தில் துல்லிய பண்ணை முறையில் கத்திரி பயிரிட்டுள்ளதை திட்ட ஒருங்கிணைப் பாளர் முனைவர் க. சோழன் அவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பார்வையிட்டனர்.



சிறப்பு ஆசிரியர்
முனைவர் **கா.அ. பொன்னுசாமி**
விரிவாக்கக் கல்வி இயக்குநர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

ஆசிரியர்
முனைவர் **க. சோழன்**
திட்ட ஒருங்கிணைப்பாளர்

இணை ஆசிரியர்
முனைவர் **தங்க. தாமோதரன்**
தொழில் நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்)

ஆசிரியர் குழு
முனைவர் **அ. காமராஜ்,** தொழில் நுட்ப வல்லுநர் (வேளாண் பொறியியல்)
முனைவர் **ஜெ. ஜெயக்குமார்,** தொழில் நுட்ப வல்லுநர் (நூற்புழுவியல்)
முனைவர் **வெ. சிவக்குமார்,** தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)
முனைவர் **வே. அலெக்ஸ் ஆல்பர்ட்,** தொழில் நுட்ப வல்லுநர் (விதை நுட்பவியல்)
முனைவர் **ச. ஆனந்த கிருஷ்ணவேணி,** தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)
திருமதி **தெ. ரேகா,** திட்ட உதவியாளர் (தொழில் நுட்பம்)
திருமதி **இரா. சகுந்தலா,** திட்ட உதவியாளர் (கணினி)
திரு. **ச. பாக்கியநாதன்,** பண்ணை மேலாளர்

நூல்-அஞ்சல்

பெறுநர்

திரு. / திருமதி. ............................................................
அவர்கள்

............................................................

............................................................

அனுப்புநர்
**திட்ட ஒருங்கிணைப்பாளர்**
வேளாண்மை அறிவியல் நிலையம்
நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம்
தொலைபேசி எண்கள் : 04367-260666 / 261444
மின் அஞ்சல் : kvkndm@tnau.ac.in
வலைதளம் : www.kvkthiruvarur.com

அச்சிட்டோர் : **மை கிராபிக்ஸ்,** திருவாரூர். பேசி : 224931